# பனைமர அம்மானை

— நா. வேலுப்பிள்ளை —

894·8111
வேலுப்

Mr. K. RATNASINGHAM
AGENT & ORGANISER
NATIONAL LOTTERIES BOARD
FOR JATHIKA SAMPATHA
KOPAY ELECTORATE
NIRTH URUMPIRAI

# அகில இலங்கைக் கைத்தொழில் பொருட்காட்சி

வலிகாமம் வடக்குக்கிழக்கு

PAYEE'S CREDIT ONLY.

# PALMYRAHPALM.

# பனைமர அம்மானை.

ஸ்ரீமான் நா. வேலுப்பிள்ளை.

(வலிகாமம் வடக்குக்கிழக்கு மணியகாரன்)

...ால் அச்சிடுவிக்கப்பெற்றது.

—o—

894.8111
வேலுப்

Ranjini [illegible] Ratnasingham

Mr.K.RATNASINGHAM
SALE AGENT & ORGANISER
NATIONAL LOTTERIES
FOR SITHI COMPANY
KOPAY ELECTORATE
SOUTH JAFFNA

# பனைமர அம்மானை.

## வெண்பா.

கற்பக தாருவெனக் கற்றவரா லும்புகழ்ந்து
சொற்றபனை யின்மேன்மை சொல்லவே--சற்றுங்
குறையணுகா திந்தக் குவலயத்தைக் காக்கும்
இறையவனே யென்னுள் ளிரு.

## அம்மானை.

EVELYN RUTNAM INSTITUTE
158
REFER
LIBRARY
JAF

யாழ்ப்பாணநாடதனி லெவ்வீட்டைப்பார்த்தாலும்
கேட்பானேனெல்லாங் கிளர்ந்தபனையாயிருக்கும்

புதுநாகரீகம் புகுமுன்பனையதின்றி
வதிவோர்சீவித்தல் மலடிமகனுயிருக்கும்

பஞ்சமதைத்தாங்கும் பனட்டினதுகூடைகளும
எஞ்சமுகந்தன்னி லிப்போதுகண்டதில்லை

பனைப்பிரயோசனந்தான் பாழாகப்போவதனை
நினைத்திவ்வம்மானைதனை நிகழ்த்தத்துணிந்துவிட்டோம்

வேர்த்துக்களைப்புறவே வேலைசெய்யமாட்டாதார்
சூர்த்தபனம்பண்டத்தைத் தொடவும் அருவருப்பார்

காலங்கலிகாலம் கல்விகற்றலங்கிளமாம்
மேலைத்தேசத்தார் விரும்புமுணவுண்பார்கள்

பனைப்பிரயோசனத்தைப் பக்குவஞ்செய்துண்பதற்கு
வினைக்கெடமாட்டாமல் மேலைத்தேசத்திருந்து

உணவுமுதலாய் உயர்ச்சியெனவழைத்துப்
பணமளித்துண்பார் பலராகிவிட்டார்கள்

சிலவருடங்களின்முன் சென்னைக்குச்சென்றேம்நாம்
பலருமெம்மட்டிற் பரிகாசஞ்செய்பவில்லை

தோணிவிடும்யாழ்ப்பாணர் சொத்துவிலைகேட்கவில்லை
காணுதெனவே கருதிநளினமதாய்

## பனைமர அம்மானை

பனங்கொட்டையென்று பலதரமுங்கூறியதால்
கனங்கெட்டசொட்டைமொழி கண்டேயநிசயித்தோம்

பனங்கொட்டைசூப்புமியாழ்ப் பாணிகளென்றேபிறவிர்ச்
சனங்கள்சிலர்பேசுஞ் சரசமொழிக்காக

இவ்வுணவைவிட்டாரோ இக்காலத்தாரறியோம்
எவ்வகையானாலும் இதன்மேன்மைகூறுகிறோம்

அதனால்வரும்பேற்றை அறிந்தளவுகூறுதற்கு
பதனமதாயிருந்து பண்பாகக்கேட்டருள்வீர்

[பனங்கொட்டை]

பனைமுந்தினதோ பனங்கொட்டைமுந்தினதோ
எனவெண்ணுவார்க்கு இறைவன்செயல்விழங்கும்

வித்தின்றியோர்பயிரும் மேதினியிலில்லையதால்
அத்தையடிப்படையா யறிந்தளவுகூறுகிறோம்

பனங்கொட்டைதன்னில் பலனைவிரித்துரைக்கில்
கனங்கொண்டபூரான் கருதுமுதற்பலனாம்

அப்பூரான்றன்னுருசி யாலேசிறுவர்களும்
எப்போகிடைக்குமென எண்ணியிருப்பார்கள்

பக்குவமாய்யுலர்த்திப் பாணியிட்டுவைத்தாக்கால்
எக்குலத்தாருமதை ஏற்றருந்திப்பார்ப்பார்கள்

[கிழங்கு]

கிழங்குகனல்மேகங் கிட்டாதென்றாராய்ந்தோர்
களங்கமறவுரைத்தார் கருதுங்கிழங்கவித்து

உள்ளிமிளகாயுப்போ டுண்டால்வாய்வும்போகும்
தெள்ளியநீர்தன்னிற் றிறமாயவித்தெடுத்து

சம்பாரஞ்சேர்த்துச் சரியாய்த்துவையல்செய்து
நம்பியருந்திடுகில் நல்லபலன்கொடுக்கும்

அவித்துப்புழுக்கொடிய லாக்கியருந்தநன்றாம்
உவப்புற்றதேங்காய்ப்பூ வுடனபனங்கட்டியையுஞ்

சேர்க்கிடித்துண்டுகில் தித்திப்பதாயிருக்கும்
ஆர்த்தவெயிலிலொடிய லாய்ச்செய்தபுட்டொடுகூழ்
செய்தருந்திவந்தாலுந் தீபனமதாயிருக்கும்
துய்யகிழங்கதனைச் சுத்தமதாமுரலில்

நன்றாயிடித்தெடுத்து நல்லதண்ணீர்விட்டலசிக்
குன்றாதசீலைவடி கொண்டதனை வைத்தபின்பு

சலத்தையிறுத்தபின்னர் தங்கியமாவைவெயிலி
லுலர்த்தியெடுத்தாலிதனைக் கொன்றுமிணையாகாது

பால்போன்றிருக்கும் பசுமாருட்மாவினிலும்
மேலாமிதனை விரும்புவாரெல்லோரும்

பக்குவமதாகப் பலபண்டஞ்செய்தருந்தில்
எக்குலத்தார்களுக்கும் இவ்வுணவுதானேற்கும்

ஒட்டுப்பனைக்கெங்கும் ஒடியலையாமல்
திட்டஒடியலின்மா சிறந்தபசை யாயிருக்கும்

பனையின்கிழங்கினால் படாஸ்திச்சூடெட்டனே
வினைசெய்திடும்பித்த மேகமும்போமல்லாமல்

குளிர்ச்சியுடன்வளப்புக் கொள்ளுமெனமுன்னோர்கள்
களர்ச்சிபறவாகடத்திற் தானேயெழுதிவைத்தார்

(பனம்பழம், பனம்பூ)

பனம்பழத்தினாற்பசிபோம் பற்றும்பனம்பூவால்
கனந்தங்குவாதகுன்மம் கதித்தபழையசுரம்
தந்தரோகத்துடனே சார்மூத்திரகிரிச்ரம்
விந்தையாய்த்தீருமென விளம்பினார்பண்டிதர்கள்

(நுங்கு)

நுங்கால் அழலை நுவலும்பிரமேகம்
தங்குசீதப்பேதி தாவுபகலுமென்றார்
நுங்கின்சலத்தை நுவலும்வெயர்க்குருவுக்
கங்கமதிற்பூசில் இகலுமெனவுரைத்தார்

EVELYN RHODES INSTITUTE
158
REFERENCE
LIBRARY
JAFFNA



## பனைமர அம்மானை

### கள்ளு

அதிகாலையில்மிதமாய் அரியபுதுக்கள்ளருந்தில்
இதமாய்விடாய்தணிந்து இறுகுமலமிளகும்

கள்ளைமட்டாயருந்தில் கனல்மூலச்சூடுடனே
உள்ளவியாதியறும் உடம்புபெலனுகும்

புளித்தகள்ளுண்டால் புறங்கூறலாயாசம்
ஒளித்தகதையெல்லாம் ஓதிஅறிவிழப்பார்

பாண்டுவியாதிகட்குப் பரிவானகாடிசெய்ய
வேண்டில்முதியகள்ளு வேணும்வைத்தியர்க்கு

மாவைப்புளித்திடவே வைக்கப்புண்சுத்திசெய்ய
மேவுஞ்சுருட்டினுக்கும் வேண்டும்முதியகள்ளு

### (சாராயம்)

கள்ளைப்புளிக்கவைத்துக் கருதாச்சசெய்வார்கள்
உள்ளநோய்க்குமருந்திட் டேறலுஞ்செய்வார்கள்

மட்டாய்க்குடித்தால் மயக்கம்மருவாது
தொட்டாரதனைவிடார் சோலிமிக வுண்டாகும்

சாராயங்காச்சித் தருமருந்துபோட்டருந்தில்
சோராதநோயெனவுந் தீட்டிணர்வாகடத்தில்

நன்மைசெய்யச்சொன்னதனை நாட்டாரறியாமல்
உன்மத்தராய்க்குடித்து ஊறடைந்துகேடுறுவார்

### கருப்பநீர்

சுண்ணும்பையிட்டிறக்குஞ் சுத்தப்பதநீரால்
திண்ணம்பிரமேகந் தீருமெனும்வாகடநூல்

பதநீருந்தில் படிந்தபுளிப்பகலும்
மிதமாயருந்திவரில் வில்லங்கஞ்செய்யாது

### பாணி

இளம்பாணிகாய்ச்சி இனியசரியதாம்
வளப்பெறவேசுட்டால் மகாவுரிசியாயிருக்கும்

## பனைமர அம்மானை

### பனம் கற்கண்டு

பதனீரினையிறுகப் பாணியாகக்காய்ச்சிப்
புதிதாம்பாண்டத்திற் பொருந்தவேவைத்திருந்தால்

அதனால்விளையும் அரியகற்கண்டினுக்கு
அதிதாகம்வெப்பம் அருநீர்ச்சுருக்குடனே

மேகம்முதலான வியாதிகளும்போமெனவே
யூகமுறுபண்டிதர்கள் உணர்ந்தேயுரைத்தார்கள்

### பனங்கட்டி

பனங்கட்டிசெய்து பாவித்தால்நல்லினிப்பு
மணங்கெட்டிடாமல் மதுரமிகுதியுண்டாம்

புழுக்கொடியலோடு பொருந்துபனங்கட்டியை
நழுத்தியிடித்தருந்தில் அதிமதுரமாயிருக்கும்

பயற்றம்பணிகாரம் பருவுறுசிற்றுண்டி
இயற்றியுண்டாக்கால் இனிமைமிகுதியுண்டாம்

பனங்கட்டிதேங்காய்ப்பூ பருப்புங்கலந்தியற்றும்
மனங்கொண்டமோதகத்தை மதியாதார்யாருமில்லை

### பனாட்டு

பனங்காய்தனைப்பிழிந்து பனாட்டாகச்செய்தாக்கால்
கனங்காணுணவாய்க் கருதுபசியற்றிருக்கும்

சீரகமும்மிளகும் சேர்பாணிகாய்ச்சிபிட்டால்
காரமுடனுரிசி காட்டுமுணவாகும்

பாவியரிலொருவர் பாணிப்பனாட்டியற்றி
மேலைத்தேசத்தனுப்ப விரும்பியுண்டாரென்றறிவோம்

### பனம்பூசு

பனையட்டையின் கருக்கிற் பற்றும்பூசைச்சிதைத்து
நினைவாய்க்காயத்திலிடில் நீங்குமுதிரப்பாய்ச்சல்

## பனைமர அம்மானை

### பீலி

பனம்பீலியானதிலே பன்னம்பல புனைவார்
புனைந்திடுந்தொப்பிசெய்யில் புனிதமதாயிருக்கும்

### ஓலை

ஓலையிற்பெட்டி யுடன்கடகங்கூடையுமல்
பாலர்விளையாட்டுப் பன்னங்கள்பட்டைசெய்வார்

விசிறியுடன்பாய் விநோதமுள்ளபின்னல்களும்
இசைவைக்கானுங்குடையும் ஏடுமதிற்செய்திடுவார்

எட்டுமூலைக்குட்டான் யானைக்குட்டானுதி
கட்டுமுட்டெல்லாஞ் சமைப்பார்சாயோலைசெய்வார்

வண்ணப்பாய்செய்வார் வடிவானபெட்டிசெய்வார்
பின்னலுறும்பெட்டி பேழைகள் செய்திடுவார்

வேலியடைப்பார் விசித்திரவேலைபல
கோலமுடன்புனைவார் குடில்களதால்வேவார்

ஏறுபெட்டிசெய்வார் இதில்நீற்றுப்பெட்டிசெய்வார்
கூழுங்கதிர்ப்பாயுங் கோலப்பாயும்புனைவார்

வீடுகள்வேய்வார் விளக்குமாறும்புனைவார்
தேடிமாடாடினுக்குத் தீனைகப்போட்டிடுவார்

### ஈர்க்கு

ஈர்க்கில்சுழகுகட்டு இடியப்பத்தட்டுவடம்
சேர்க்குந்திலாக்கொடியும் சேர்ந்தவுறியும்புனைவார்

கடகமட்டைகட்டக் கடகமதைப்பொத்தித்
திடனாகவைக்கதுபோற் றேடக்கிடையாது

### நார்

நாரிற்கயிறுடனே நயந்தகந்துசெய்திடுவார்
சேர்வேலிகட்டச் சிறந்தகுடிலோடுதொட்டில்

வரியப்பேண்கட்ட மனைவேயமற்றுமுள்ள
அரியதொழிற்கு மதிவுதவியாயிருக்கும்

## பனைமா அம்மானை

### தும்பு

தும்பிற்பிறஷ் செய்வார் துடைப்பம்பலபுனைவார்
நட்பிமட்டைத்தும்பில் நயந்தகயிறுசெய்வார்

### மரம்

மரத்தினில்வீடுகட்டும் மரமும்சலாகைகளும்
உரத்தவளையும் உயர்ந்தபடலைகளும்

தொட்டிலொடுகட்டில் துலா ஏர்க்கால் அட்டாளை
கட்டும்படல்வரிச்சுக் கனமான அச்சுலக்கை

வண்டிற்கிறுதிதுலா வரையுமுறாட்டடியும்
கண்டிப்பாய்வேலிகட்டுக் கட்டுஞ்சலாகைகளும்

துலாநென்புலக்கை தொடுத்தநுகக்கிட்டிகளும்
உலாவுன்றுகோலு முயர்ந்தவாச்சிப்பிடியும்

இன்னும்விதாவிதமா மெய்ப்பொருளுஞ்செய்வார்கள்
டன்னுகில்வீடெல்லாம் பனையாலியற்றிடுவார்

சொற்றபனையாலே சுகம்பெற்றயாழ்ப்பாணம்
கற்பகதாருவெனக் கழறியதுண்மையதே

### முடிவுரை.

எம்முடையநாட்டை இதுதாங்கிவந்திருக்க
தம்மதிப்புக்கெட்டதெனத் தள்ளினரிவ்வுணவை

எல்லாருமெங்கிளத்தை எப்பாடுபட்டேனும்
நல்லாய்ப்பொருள்கொடுத்து நாட்டினிற்கற்பதினால்

பணப்பண்டந்தள்ளிப் பலவீனரானார்கள்
மனங்கொண்டவுத்யோகம் வாராதுஎல்லோர்க்கும்

மேழிபிடித்துழுது விறலாமுணவருந்தில்
பாழாகாதிந்தயாழ்ப் பாணமதைக்காத்திடலாம்

இப்போதியாழ்ப்பாண ரிவ்வுணவைவிட்டதினால்
குப்பமதாய்ப்பனைக்கீழ் குவிந்துபழங்கிடக்கும்

மாடுகடித்ததன்றி வாயாலேதின்றவரை
நாடுதனிற்கண்டதில்லை நாகரிகமேலீட்டால்

## பனைமர அம்மானை

பலசரக்கிட்டுயர்ந்த பாணிப்பனுட்டாக்கி
நலமுறைரோப்பினுக்கு நலமாயனுப்பிவைத்தால்

நல்லவியாபாரமதாம் நாடுஞ்செழித்துவிடும்
இல்லியமாமாவினையுஞ் சொன்னபடி செய்தனுப்பில்

எல்லாப்பிழைப்பினிலு மித்தகன்மையாயிருக்கும்
அல்லோரேசெய்தால் வருமானமுண்டாகும்

தாமுமிதையருந்திச் சாப்பிடக்கற்றுவிட்டால்
சேமமாமென்றே தெளிந்துறுதிகொள்வீர்.

EVELYN RUTNAM INSTITUTE
158
REFERENCE
LIBRARY

Mr.K.RATNASINGHAM
SALE AGENT & ORGANISER
NATIONAL LOTTERIES B...
FOR JATHIKA SAMPAT...
KOPAY ...
SOUTH URUMPIRAI